முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.07.2023, வியாழக்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
   தன்னார்வத் தொண்டர் படைகளை
   அவனியில் உருவாக்க வேண்டி
   அவதாரம் புரிந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிதனை சோபகிருது மிதுனதிங்கள்
   அய்யமற எழுநான்கு திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 28ம் நாள், 13.07.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் திருஞானசம்பந்தர் யானும்
   வழங்குவேன் உலக நலம் பெற
   சோரமில்லா மக்களை படைத்திட
   சுத்த நெறி காட்டும் அரங்கன் வழியை
4. வழியை மக்கள் ஏற்றுமே
   வணங்கி பிரணவக் குடிலதனை
   தெளிவுபெற அனுகித் தொடர
   தொடர்ந்து வந்து ஞானிகளின்
5. ஞானிகளின் பூசை கலந்து
   ஞானம்பயின்று வருதல் காண
   ஞானிகளின் புகழை உலகெல்லாம்
   நம்பிக்கைபட பரப்பி வர
6. வருகவே உலகம் எங்கிலும்
   வள்ளலின் ஆசி பெற்றவர்களாக
   தரும குணம் படைத்தவர்களாக
   தரணியோர் மாற்றம்தனை கண்டு

7. கண்டுமே சன்மார்க்க பலமுடன்
கருணை தயவில் குறைவிலா
தொண்டர்களாக தூயவான்களாக
தேசிகன் தேர்வு செய்த ஞானிகளாக
8. ஆகவே ஆற்றலும் கூடியே
அனைவரும் ஞானயுகம் படைக்கும்
மிகையான சக்தி கொண்டவர்களாக
முருகப்பெருமான் ஆசிபெற்றவர்களாக
9. ஆகவே தேற்றம் அடைந்து
ஆறுமுகன் தலைமை கொண்ட
செகமதனில் ஞான ஆட்சி
செப்பிடுவேன் அமைத்து சிறப்பர்
10. சிறப்பான பாதுகாப்புமிக்க
செப்பிட ஞானயுக மாற்றம்
அறத்தின் பலத்தால் படைத்து
அரங்கமகான் அவதார நோக்கம்
11. நோக்கம் இலகுவாய் பூர்த்திபட
நிலவுலகம் கண்டு சிறக்கும்
ஆக்கமுடன் ஞான உலகமாகும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–